தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

செய்தி வெளியீட்டு எண்: 129 /2026 **நாள்:25.11.2026**

செய்திக்குறிப்பு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அறிவிக்கை எண்:07/2025, நாள்: 25.04.2025 இன் வாயிலாக ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு தொகுதி (IVல்) அடங்கியுள்ள வனக்காப்பாளர், ஓட்டுநர் உரிமத்துடன்கூடிய வனக்காப்பாளர், வனக்காவலர் மற்றும் வனக்காவலர் (பழங்குடியின இளைஞர்) (Phase-II) பதவிகளுக்கான காலிப் பணியிடங்களில் நேரடி நியமனம் செய்வதற்குத் தெரிவு செய்யப்பட்டு 29.10.2026 நாளன்று வெளியிடப்பட்ட பட்டியலில் உள்ள தெரிவர்களால் பதிவேற்றம் செய்யப்பட்ட சான்றிதழ்கள், கணினி வழித்திரை சான்றிதழ் சரிபார்ப்பிற்குப் பின்னர் சில தெரிவர்கள் உரியச் சான்றிதழ்களைக் குறைபாடாக / சரியாகப் பதிவேற்றம் செய்யப்படாமல் உள்ளது கண்டறியப்பட்டுள்ளது. எனவே, இத்தகைய தெரிவர்களுக்கு இறுதி வாய்ப்பு வழங்கும் விதமாக 26.11.2026 **முதல்** 05.12.2026 இரவு 11.59 மணி வரை விடுபட்ட மற்றும் சரியான சான்றிதழ்களை மறுபதிவேற்றம் செய்ய வாய்ப்பு வழங்கப்படுகிறது. இத்தகவல் அத்தெரிவர்களுக்கு மட்டும் குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலமாக மீளப் பதிவேற்றம் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, அத்தெரிவர்கள் அனைவரும் தங்களது குறிப்பாணையில் (Memorandum) தெரிவிக்கப்பட்டுள்ள சான்றிதழ்களைத் தேர்வாணைய இணையதளத்தில் தங்களது ஒருமுறைப் பதிவுதளம் (OTR) வாயிலாக மீளப் பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள். அவ்வாறு உரியச் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்யாத தெரிவர்களின் உரிமைகோரல் (claim) / விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

திரு.பானோத் ம்ருகேந்தர் லால், இ.ஆ.ப
செயலாளர்